# மெட்ரிக்ஸ் மேம்பாட்டு நிறுவன கிறிஸ்துமஸ் விழாவில் குழந்தைகளை பராமரிக்கும் இல்லங்களுக்கு நிதி உதவி






(துர்க்கா)

சிரம்பான், டிச. 17-

மெட்ரிக்ஸ் மேம்பாட்டு நிறுவன கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு நடத்தப்படும் மாயாஜால விழாவில் ஏழைக் குழந்தைகளை பராமரிக்கும் இல்லங்களுக்கு நிதி உதவி வழங்கி உதவியது.

சிரம்பான், பண்டார் ஸ்ரீ செண்டாயான் கண்ட்ரி கிளப் மண்டபத்தில் நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் பண்டிகையை வரவேற்கும் விழாவில் அதன் இயக்குநர் லிம் கோக் யீ சம்பந்தப்பட்ட சிரம்பான் குழந்தைகள் பராமரிப்பு இல்லம், ஷெகினா குழந்தைகள் பராமரிப்பு இல்லம் உட்பட ஒரு தேவாலயத்திற்கும் தலா வெ.3 ஆயிரம் நிதிக்கான காசோலையை ஒப்படைத்தார்.

இந்த கிறிஸ்துமஸ் விழா டிசம்பர் 10 முதல் மாலை தொடங்கி இரவு 10 மணி வரை தொடர்ந்து 15 தினங்களுக்கு சிறுவர்கள், குழந்தைகள் பங்கெடுக்கும் வகையில் பலதரப்பட்ட இலவச விளையாட்டு போட்டிகள், நடனங்கள், மாயாஜால நிகழ்ச்சிகள் பொதுமக்கள் பங்கெடுக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அவர் விளக்கினார்.

மெட்ரிக்ஸ் மேம்பாட்டு நிறுவனத்திற்கு இலாபம் அடைவது நோக்கமாக இருந்தாலும், சமூக சேவைகள் மூலம் நிதி உதவிகள் செய்து வருவதை கடமையாகக் கொண்டுள்ளது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

மலேசியாவில் கொண்டாடப்படும் தீபாவளி, ஹரிராயா, சீன புத்தாண்டு, கிறிஸ்துமஸ் ஆகிய பண்டிகை நாட்களில் இது போன்ற விழாக்களை மெட்ரிக்ஸ் நிறுவனம் ஏற்பாடு செய்து நிதி உதவிகள் வழங்கி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.